49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	190,61,65	1	1
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	25,676,30,92	--	--
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	928,21,20	--	--
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	541,49,19	3,05,52	16,25
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	36,43,35	--	1
54	வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	367,46,22	111,86,62	--
பெருமொத்தம்		**161,128,61,89**	**28,284,96,23**	**4,534,81,36**

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2022 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச்

(முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

12. வரவு–செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022–2023, பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022–2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீதான பதிலுரை. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) பதிலுரை வந்துவிட்டதல்லவா? (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) இல்லை, subject வந்துவிட்டது. போதுமான அளவு எல்லோருக்கும் பேச வாய்ப்பு